**செய்தி வெளியீடு எண்: 556** **நாள்: 18.08.2018**

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி K.பழனிசாமி அவர்கள் தமிழ்நாட்டில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் நேரில் ஆய்வு**

தமிழ்நாட்டில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி K.பழனிசாமி அவர்கள் நாளை (19.08.2018) அன்று நேரில் பார்வையிடவுள்ளார்கள். நாளை காலை விமானம் மூலம் கோவை சென்று அங்கு இருந்து பவானி, குமாரபாளையம், பள்ளிபாளையம், ஈரோடு மாவட்டம் – கருங்கல்பாளையம், ஆகிய இடங்களில் ஆய்வு மேற்கொள்ளவுள்ளார்கள். அதனை தொடர்ந்து ஈரோடு சுற்றுலா மாளிகையில் வெள்ளநிவாரணம் குறித்து அரசு உயர் அலுவலர்கள் உடன் ஆலோசனை கூட்டம் நடைபெறவுள்ளது.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**